இதுமுதல் ௬-பாடல இராமனறம்பிழையாதவனெனத
தாரைக்கு வாலிகூறுதல.

உழைத்தவல்லிருவினைக்கூறுகாண்கலா
தழைத்தயருலகினுக் * கறத்தினாறெலாம்
இழைத்தவற்கியலபலவியம்பியெனசெய்தாய்
பிழைத்தனைபாவியுன்பெண்மையாலென்றான். (௨௨)

இருமையுநோக்குறுமியல்பினாற்கிது
பெருமையோவிங்கிதிற்பெறுவதென்கொலோ
அருமையினின்றுயிரளிக்கு † மாறுடைத்
தருமமேதவிர்க்குமோதன்னைத்தானரோ. (௨௩)

ஏற்றபேருலகெலாமெய்தியீன்றவள்
மாற்றவளேவமற்றவடன்மைந்தனுக்
காற்றருமுவகையாலளித்தவையனைப்
போற்றலையின்னனபுகறற்பாலையோ. (௨௪)

நின்றபேருலகெலாநெருக்கிநேரினும்
வென்றிவெஞ்சிலையலாற்பிறிதுவேண்டுமோ
தன்றுணையொருவருந்தன்னில்வேறிலான்
புன்றொழிற்குரங்கொடுபுணருநட்பனோ. (௨௫)

தம்பியரல்லதுதனக்குவேறுயிர்
இம்பரினிலதெனவெண்ணியேய்ந்தவன்
எம்பியும்யானுமுற்றெதிர்ந்தபோரிடை
அம்பிடைதொடுக்குமோவருளினாழியான். (௨௬)

இருத்திநீயிறையிவணிமைப்பில்காலையில்
உருத்தவனுயிர்குடித்துடன்வந்தாரையும்
கருத்தழித்தெய்துவென்கலங்கலென்றனன்
விரைக்குழல்பினனுரைவிளம்பவஞ்சினாள். (௨௭)

வேறு.

ஒல்லைச்செருவேட்டுயர்வல்புயவோங்கலும்பர்
எல்லைக்குமப்பாலிவர்கின்றவிரண்டினோடும்
மல்லற்கிரியினறலைவந்தனன்வாலிகீழ்பால்
தொல்லைக்கிரியின்றலைதோற்றியஞாயிறென்ன. (௨௮)

* அறத்தினாறெலாம் இழைத்தவற்கு - தருமமார்க்கமனைத்துஞ் செய்த இராமற்கு.

† ஆறுடை-வழியினையுடைய.

நின்றனெதிர்யாவருநெஞ்சுநடுங்கியஞ்சத்
தன்றோள்வலியாற்றகைமால்வரைசாலும்வாலி
குன்றூடுவந்துற்றனன் * கோளவுணன்குறித்த
வன்றூணிடைத்தோன்றியமாநரசிங்கமென்ன. (௪௯)

ஆர்க்கின்றபின்னோன்றனைநோக்கினன்றானுமார்த்தான்
வேர்க்கின்றவானத்துருமேறுவெறித்துவீழப்
போர்க்கின்றதெல்லாவுலகும்பொதிர்வுற்றபூசல்
கார்க்குன்றமன்னானிலந்தாவியகாலினென்ன. (௫௦)

அவ்வேலையிராமனுமன்புடைத்தம்பிக்கைய
செவ்வேசெலநோக்குதிதானவர்தேவர்நிற்க
எவ்வேலையெம்மேகமெக்காலொடெக்காலவெந்தீ
வெவ்வேறுலகத்திவன்மேனியைமானுமென்றான். (௫௧)

வள்ளற்கிளையான்பகர்வானிவன்றம்முன்வாளுள்
கொள்ளக்கொடுங்கூற்றுவனைக்கொணர்ந்தான்குரங்கின்
எள்ளற்கரும்போரதுசெய்கலனென்னுமின்னல்
உள்ளத்தினூனறவுணர்வுற்றிலனென்றுமென்றான். (௫௨)

இளையோன் இராமனிடஞ் சுக்ரீவனை இகழ்ந்துரைத்தல்.

ஆற்றாதுபின்னும்பகர்வானறத்தாறழுங்கத்
தேற்றாதுசெய்வார்களைத்தேறுதல்செவ்விதன்றான்
மாற்றானெனத்தம்முனைக்கொல்லியவந்துநின்றான்
வேற்றார்கடிறத்திவன்றஞ்சமென்வீரவென்றான். (௫௩)

அத்தாவிதுகேளெனவாரியன்கூறுவானிப்
பித்தாயவிலங்கினொழுக்கினைப்பேசலாமோ
எத்தாயர்வயிற்றினுமபின்பிறந்தார்களெல்லாம்
ஒத்தாற்பரதன்பெரிதுத்தமனாதலுண்டோ. (௫௪)

விற்றாங்குவெற்பன்னவிலங்கெழிற்றோளமெய்ம்மை
உற்றார்சிலரல்லவரேபலரென்பதுண்மை
பெற்றாருழைப்பெற்றபயன்பெறும்பெற்றியல்லால்
அற்றார்நவையென்றலுக்காகுநரார்கொலென்றான். (௫௫)

வாலி சுக்கிரீவயுத்தம்.

வீரத்திறலோரிவையின்னவிளம்புமவேலை
தேரிற்றிரிவான்மகனிந்திரன்செம்மலென்றிப்
பாரிற்றிரியும்பனிமால்வரையன்னபண்பார்
மூரித்திசையானையிரண்டெனமுட்டினாரே. (௫௬)

---

* கோளவுணன்-கொலைத்தொழிலினையுடைய இரணியன்.

குன்றோடுகுன்றொததனர்கோளரிக்கொற்றவலலே
றொன்றோடுசென்றொன்றெதிருறறனவேயுமொததார
நின்றார் திரிநதாரநெடுஞசாரிநிலநதிரிநத
வன்றோட்குயவன்றிணிமட்கலததாழியென்ன. (௩௭)

தோளோடுதோடேய்ததலிறறொனணிலநதாஙகலாற்றாத
தாளோடுதாடேய்ததலிற்றநததழற் * பிறஙகல்
வாளோடுமினனோடுவபோனெடுவானினோடும்
கோளோடுகோளுற்றனவொததடாநதாரகொதிததார. (௩௮)

தந்தோள்வலிமிககவாதமமொருதாய்வயிற்றின
வந்தோர்மடமஙகைபொருட்டுமலைககலுற்றார்
† சிநதோடரியொண்கட்டிலோததமைகாதலசெற்ற
சுந்தோபசுநதப்பெயரதொல்லையினோருமொததார. (௩௯)

கடலொனறினொடொனறுமலைககவுஙகாவனமேருத
திடலொன்றினொடொன்றமாசெய்யவுஞ்சீற்றமென்ப
துடல்கொண்டிரண்டாகியுடறறவுஙகணடிலாதே
மிடலிஙகவாவெநதொழிறகொப்புரைவேறுகாணேம. (௪௦)

ஊகஙகளினாயகாவெஙகணுமிழநததீயான்
மேகஙகளெரிநதனவெறபுமெரிநததிககின
நாகஙகணடுஙகினநாணிலமுஙகுலைநத
மாகஙகளைநண்ணியவிண்ணவாபோயமறைநதார. (௪௧)

விண்மேலினரோநெடுவெற்பின்முகட்டினரோ
மண்மேலினரோபுறமாதிரவீதியாரோ
கண்மேலினரோவெனயாவருஙகாணநின்றா
புண்மேலிரததம்பொடிப்பககடிப்பார்புடைப்பார். (௪௨)

எழொத்துடனுநதிசையெட்டொடிரண்டுமுட்டும்
ஆழிக்கிளரார்கலிக ‡ கைமமடஙகாப்பினோசைப்
பாழிததடந்தோளினுமாபினுஙகைகள்பாய
ஊழிக்கிளாகாரிடியொத்ததுகுததுமோதை. (௪௩)

வெவவாயெயிற்றான்மிடல்வீரகடிப்பமீசசென்
றவவாயெழுசோரியதாரைகடோறும்வீச
வெவவாயுமெழுநதகொழுஞசுடர்மீனகள்யாவும்
செவ்வாயைநிகாத்தனசெககரையொததமேகம். (௪௪)

---

* பிறஙகல்-மலை.

† சிந்தோடு-கடலும்பின்னிடுகின்ற.

‡ ஐம்மடங்கு-ஐநதுபங்கு.

6

வேறு.

வெந்தவல்லிரும்பிடைநெடுங * கூடங்கள்வீழப்பச
சிந்தியெங்கணுஞ்சிதறுவபோற்பொறிதெறிப்ப
இந்திரன்மகன்புயங்களுமிரவிசேயுரனும்
சந்தவனநெடுந்தட்கைகடாககலிற்றகாவ. (௪௫)

உரத்தினைமடுத்துந்துவாயாதமிட்டுதைப்பர்
கரத்தினல்விசைதெற்றுவாகடிப்பாநின்றிடிப்பா
மரத்தினலடித்துரப்புவர்பொருப்பினம்வாங்கிச
சிரத்தின்மேலெறிந்துறுகருவாதெழிப்பர்தீவிழிப்பா. (௪௬)

எடுப்பர்பற்றியுற்றொருவரையொருவர்விட்டெறிவா
கொடுப்பர்வந்துரங்குத்துவாகைத்தலங்குளிப்பக்
கடுப்பினிற்பெருங்கறங்கெனச்சாரிகைபிறங்கத
தடுப்பாபினறுவரொன்றுவாதழுவுவாவிழுவா. (௪௭)

வாலினாலுரமவரிந்தனாநெரிந்துகவலிப்பா
காலினானெடுங்காலபிடித்துடற்றுவாகழலவா
வேலினாலறவெறிந்தனவிறலவலி † யுகிரால்
தோலினாலுடனெடுவரைமுழையெனததொளைப்பா. (௪௮)

மண்ணகத்தனமலைகளுமரங்களுமற்றும
கண்ணகத்தினிற்றோன்றியயாவையுங்கையால்
எண்ணகப்பறிததெறிதலினெற்றலினிற்ற
விண்ணகத்தினைமறைத்தனமறிகடலவீழந்த. (௪௯)

வெருவிச்சாய்ந்தனர்விண்ணவாவேறென்னைவிளம்பல்
ஒருவாககாணடமொருவருந்தோற்றிலருடனறு'
செருவிற்றுய்த்தலிற்செங்கனலவெண்மயிாசெல்ல
முரிபுற்கானிடையெரிபரந்தனவெனமுனைவாா. (௫0)

அன்னதன்மையராற்றலினமர்புரிபொழுதின்
வன்னெடுந்தடந்திரள்புயத்தடுதிறல்வாலி
சொன்னதம்பியைத ‡ தும்பியையரிதொலைத்தென்னக்
கொன்னகங்களிற்கரங்களிறகுலைந்துகமலைநதான். (௫௧

இராமன் சுக்கிரீவனை நம்மையறிந்துகொள்ளக
கொடிப்பூசசூடிச் செலலெனல்.

மலைந்தபோதி § னைந்திரவிசேயையன்மாட்டணுகி
உலைந்தசிந்தையோடுணங்கினனவணங்கிடவுள்ளம்

---

* கூடங்கள்-சம்மட்டிகள். † உகிரால-நகத்தால்.
‡ தும்பியை-யானையை. § இனைந்து-வருந்தி.

குலைந்திடேலுமைவேற்றுமைதெரிந்திலங்கொடிப்பூ
மிலைந்துசெல்கெனவிடுத்தனனெதிர்த்தனன்மீட்டும. (௫௨)

தயங்குதாரகைநிரைதொடுத்தணிந்தனபோல
வயங்குசென்னியனவயப்புலிவானவல்லேறனோ
டியங்குமார்பினனுலைவந்தடுதிறல்வாலி
பயங்கொளப்புடைத்தெற்றினன்குத்தினன்பலகால (௫௩)

* அயிர்த்தசிந்தையனந்தகன்குலைகுலைந்தஞ்சச
செயிர்த்துநோக்கினன்சினந்தொடுசிறுநகைசெய்யா
வயிர்த்தகையினுங்காலினுங்கதிர்மகனயங்க
உயிர்த்தலந்தொறும்புடைத்தனனடித்தனனுதைத்தான. (௫௪)

கக்கினனுயிருயிர்ப்பொடுஞ்செவிகளிற்கண்ணின்
உக்கதாங்கெரிப்படலையோடுதிரத்தினொழுக்கம
திக்குநோக்கினன்செங்கதிரோன்மகன்செருக்கிப்
புக்குமீக்கொடுநெருக்கினனிந்திரன்புதல்வன (௫௫)

வாலியின்மேல இராமன அம்பெய்தல.

எடுத்துப்பாரிடையெற்றுவாம்பற்றியென்றிளவல்
† கடித்தலத்தினுங்கழுத்தினுந்தனிருகரங்கள்
மடுத்துமீக்கொண்டவாலிமேற்கோலொன்றுவாங்கித
தொடுத்துநாணொடுதோளுறத்திராகவன்றுரந்தான். (௫௬)

காருமவாசுவைக்கதலியின்கனியினைக்கழியச
சேருஞ்சூசியிற்சென்றதுநின்றதென்செப்ப
நீருநீதருநெருப்புமவன்காற்றுங்கீழ்நிமிர்ந்த
பாருஞ்சாவலிபடைத்தவனுரத்தையப்பகழி. (௫௭)

அலங்குதோள்வலியழிந்தனன்றம்பியை ‡ யருளான்
வலங்கொள்பாரிடையெற்றுவானுற்றபோதுவாலி
கலங்கிவல்விசைக்காலகிளர்ந்தெறிவுறக்கடைக்கால்
விலங்கன்மேருவுமவேர்பறிந்தாலெனவீழ்ந்தான். (௫௮)

சையம்வேரொடுமுருமுறச்சாய்ந்தெனச்சாய்ந்தான
வையமீதிடைகிடந்தபோரடுதிறல்வாலி
வெய்யவன்றருமதலையைமிடலகொடுகவரும்
கைநெகிழ்ந்தனனெகிழ்ந்திலன்கடுங்கணைகவாதல். (௫௯)

வெற்றிவீரனதடுகணையவன்மிடலுரத்தூ
டுற்றதப்புறத்துருத்தமுனுறுவலிக்கரத்தால்

---

* அயிர்த்த-சந்தேகித்த.

† கடித்தலம்-இடுப்பினிடம்.

‡ அருளான்-காவாஞய்.

பற்றிவாலினுங்காலினும்பிணித்தகப்படுத்தான்
கொற்றவெங்கொடு * மறலியுஞ்சிரதலங்குலைந்தான். (௬0)

எழுந்துவானமுகடிடித்ததுகப்படுப்பலெனறிவரும்
உழுந்துபேர்வுழித்திசைதிரிந்திறுப்பலென்றுறுக்கும்
விழுந்துபாரினைவேரொடுமபறிப்பலெனறேரும்
அழுந்துமிசசரமெயதவனார்கோலெனறயிர்க்கும். (௬௧)

எற்றுங்கையினைநிலத்தொடுமெரிப்பொறிபறப்பச
சுற்றுநோக்குறுஞ்சுடுசரத்தைத்துணைக்கரத்தால்
பற்றிவாலினுங்காலினுமவலியுறப்பறிப்பான
† உற்றுருமையினுலைவுறுமலையெனவுருளும (௬௨)

தேவரோவெனவயிர்க்குமத்தேவரிச்செயலுக
காவரோவவர்க்காற்றலுண்டோவெனுமயலோர
யாவரோவெனநகைசெயுமொருவனேயிறைவர
மூவரோடுமொப்பானசெயலாமெனமொழியும (௬௩)

நேமிதானகொலோநீலகண்டன்னெடுஞ்சூலம்
ஆமிதாங்கொலோவன்றெனிற்குன்றுருவயிலும்
நாமவிந்திரன்வச்சிரப்படையுமெனனடுவட்
போமெனுந ‡ துணைபோதுமோயாதெனப்புழுங்கும். (௬௪)

வில்லினற்றரப்பரிதிவவெஞ்சரமெனவியக்கும்
சொல்லினனெடுமுனிவரோதாண்டினரெனனும்
பல்லினற்கடிப்புறும்பலகாலுநதனனுரத்தைக
கல்லியார்ப்பொடும்பறிக்குமப்பகழியைக்கண்டான். (௬௫)

சரமெனும்படிதெரிந்ததுபலபடச்சலித்தென்
உரமெனும்பதமுயிரொடுமுருவியவொன்றைக
கரமிரண்டினும்வாலினுங்காலினுங்கழற்றிப்
பரமனின்னவனபெயரறிகுவெனெனப்பறிப்பான். (௬௬)

ஓங்கரும்பெருந்திறலுடைமனத்தனுள்ளத்தன்
வாங்கினான்மறறவவாளியையாளிபோல்வாலி
ஆங்குநோக்கினரமரருமவுணரும்பிறரும்
வீங்கினாகடோள்வீரரையாராவியவாதார். (௬௭)

மோடுதெண்டிரைமுரிதருகடலெனமுழங்கி
ஈடுபேருலகிறந்துளதாமெனற்கெளிதோ

---

* மறலி-யமன்.

† உற்றுருமையின்-முயன்றுமுடியாமையின்.

‡ துணைபோதுமோ-கூடபோதுமானதோ.

காடுமாநெடுவிலங்கல்கள்கடந்ததககடலின
ஊடுபோதலுற்றதனையொத்துயாநதுளதுதிரம். (௪௮)

வாலிமார்பிலிரத்தங்கண்ட சுக்ரீவன்வருநதி மயங்கிவிழுதல்.

வாசததாரவன்மார்பெனுமலைவழஙகருவி
ஓசைசசோரியைநோககினனுடன்பிறப்பென்னும
பாசததாற்பிணிப்புணடவததமபியுமபசஙகண்
நேசததாரைகளசொரிதர்நெடுநிலஞ்சோநதான (௪௯)

பறிததவாளியைப்பருவலிததடககையாற்பறறி
இறுப்பெனென்றுகொணடெழுநதனன்மேருவையிறுப்போன
முறிப்பெனனனினுமுறிவதன்றுமெனமொழியாப்
பொறிததநாமததையறிகுவானோககினனபுகழோன. (௫0)

வேறு.

மும்மைசாலுலகுக்கெலலா * மூலமநதிரததைமுற்றும்
தம்மையேதமாககுநலகுநதனிப்பெருமபததைததானே
இம்மையேயெழுமைநோய்ககுமருநதினையிராமனெனனும
செம்மைசோநாமநதனனைககண்களிற்றெரியககண்டான் (௫௧)

இல்லறநதுறநதநம்பியெமமனோககாகததஙகள
வில்லறநதுறநதவீரன்றோனறலால்வேதநூலிற
சொல்லறநதுறநதிலாதசூரியனமரபுநதொலலை
நல்லறநதுறநததென்னநகைவரநாணுட்கொண்டான். (௫௨)

வெள்கிடமகுடஞ்சாய்க்கும்வெடிபடசசிரிககுமீட்டும
உள்கிடுமிதுவுந்தானோரோஙகறமோவெனறுனனும்
முள்கிடுஙகுழியிற்புககமூரிவெஙகளிநல்யானை
தொள்கொடுஙகிடந்ததென்னத்துயருழநதழிநதுசோர்வான். (௫௩)

இராமன் வாலியெதிரே வருதல்.

இறைதிறம்பினனென்னேயிழிநதுளோரியற்கையென்னின
† முறைதிறம்பினனெனறுமொழிகின்றமுகததான்முனனா
மறைதிறம்பாதவாய்மைமன்னாககுமுனனஞ்சொல்லும
துறைதிறமபாமற்காககதோனறினனவநதுதோனற. (௫௪)

இராமனைப் பார்தது வாலியுரைததல்.

கண்ணுற்றான்வாலிநீலக்கார்முகில்கமலம்பூததது
மண்ணுற்றுவரிவிலேநதிவருவதேபோலுமாலைப்
புண்ணுற்றதனையசோரிப்பொறியொடுமபொடிப்பநோககி
எண்ணுற்றாயென்செய்தாயெனநேசுவாணியம்பலுற்றான. (௫௫)

---

* மூலமந்திரம்-தாரகமந்திரம்.
† முறை-நீதி.

வாய்மையுமரபுங்காத்துமன்னுயிர்துறந்தவள்ளற்
றூயவன்மைந்தனேநீபரதன்முன்றோன்றினாயே
தீமைதான்பிறரைக்காத்துத்தான்செய்தாற்றீங்கன்றாமோ
தாய்மையுமன்றிநட்புந்தருமமுந்தழுவிநின்றாய். (எசு)

குலமிதுகல்வியீதுகொற்றமீதுற்றுநின்ற
நலமிதுபுவனமூன்றுநாயகமுன்னதன்றே
வலமிதிவ்வுலகந்தாங்கும்வண்மையீதென்றாற்றிண்மை
அலமரச்செய்யலாமோவறிந்திருந் * தயர்ந்துளார்போல். (எஎ)

கோவியறருமமுங்கள்குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணாவுருவத்தாயுடைமையன்றே
ஆவியைச்சனகன்பெற்றவன்னத்தையமிழ்தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்னைத்திகைத்தனைபோலுஞ்செய்கை. (எஅ)

அரக்கரோரழிவுசெய்துகழிவரேலதற்குவேறோர்
குரக்கினத்தரசைக்கொல்லமனுநெறிகூறிற்றுண்டோ
இரக்கமெங்குகுத்தாயென்பாலெப்பிழைகண்டாயப்பா
† பரக்கழியிதுநீபூண்டாற்புகழையார்பரிக்கற்பாலார். (எகூ)

ஒலிகடலுலகந்தன்னிலூர்தருகுரங்கின்மாடே
கலியதுகாலம்வந்துபரந்ததோகருணைவள்ளால
மெலியவர்பாலதேயோவொழுக்கமும்விழுப்பந்தானும்
வலியவர்மெலிவுசெய்தாற்புகழன்றிவசையுமுண்டோ. (அ0)

கூட்டொருவரையும்வேண்டாக்கொற்றவபெற்றதாதை
பூட்டியசெல்வமாங்கேதம்பிக்குக்கொடுத்துப்போந்து
நாட்டொருகருமஞ்செய்தாயெம்பிக்கிவ்வரசைநல்கிக்
காட்டொருகருமஞ்செய்தாய் ‡ கருமந்தானிதன்மேலுண்டோ. (அக)

அறைகழலலங்கல்வீரராயவர்புரிவதாண்மைத்
துறையெனலாயிற்றன்றேதொன்மையினன்னூற்கெல்லாம்
இறைவனீயென்னைச்செய்ததீதெனிலிலங்கைவேந்தன்
முறையலசெய்தானென்றுமுனிதியோமுனிவிலாதாய். (அஉ)

இருவர்போரெதிருங்காலையிருவருநல்லுற்றாரே
ஒருவர்மேற்கருணைதூண்டியொருவர்மேலொளிந்துநின்று
வரிசிலைகுழையவாங்கிவாயம்புமருமத்தெய்தல்
தருமமோபிறிதொன்றாமோதக்கிலதென்னும்பக்கம். (அங)

---

* அயர்ந்துளார்-மறந்தார்

† பரக்கழி-நிந்தை. இது திசைச்சொல்.

‡ கருமம்-பாவம்.

வேறு.

வீரமன்று * விதியன்றுமெய்ம்மையின்
வாரமன்றுநின்மணணிலுகவென்னுடல்
பாரமன்றுபகையனறுபண்பொழிந
தீரமன்றிதுவென்செய்தவாறுநீ. (அ௪)

இருமைநோககினின்றியாவாககுமொககின்ற
அருமையாற்றலன்றேவறஙகாககின்ற
பெருமையென்பதிதென்பிழைபேணல்விட்
டொருமைநோக்கியொருவற்குதவலோ. (அ௫)

செயலைசசெற்றபகைதெறுவான்றெரிந்
தயலைப்பற்றிததுணையமைநதாயெனின்
புயலைப்பற்றுமப்பொஙகரிபோககியோர்
முயலைப்பற்றுவதென்னமுயற்சியோ. (அ௬)

காரியன்றகளங்கரிறததொன்மை
ஊரியன்றமதிககுளதாமெனச
சூரியனமரபுக்குமோர்தொனமறு
† ஆரியனபிறந்தாககினையாமரோ. (அ௭)

மற்றொருத்தன்வலிந்தறைறகூவவந்
துற்றவெனனையொளிததுயிருண்டநீ
‡ இற்றையிற்பிறாககும்மிகலேறெனை
நிற்றிபோலுநகிடநதநிலததரோ. (அ௮)

நூலியற்கையுநுங்குலததுந்தையா
போலியற்கையுஞ்சீலமும்போற்றலை
வாலியைப்படுத்தாயலை § மன்னற
வேலியைப்படுததாய்விறல்வீரனே. (அ௯)

தாரமற்றொருவன்கொளததன்கையிற்
பாரவெஞ்சிலைவீரம்பழிப்பதே
நேருமனறுமறைந்துநிராயுதன்
மாரபினெய்யவோவில்லிகல்வல்லதே. (௯0)

என்றுதானுமெயிறுபொடிபடத்
தின்றுகான்றுவிழிவழிதநீயுக
அன்றவாலியனையனகூறினன்
நின்றவீரனினையநிகழ்த்தினன். (௯௧)

---

* விதி-நியாயம்.
† ஆரியன்-அழகனுகியநீ.
‡ இற்றையில்-இன்றுமுதல்.
§ மன்னறவேலி-இராசநீதியாகிய வேலி.

இராமன் வாலியைத் தான் கொலைபுரிந்தது நியாயமெனவுரைத்தல்.

பிலம்புக்காயொருநாள்பெயராயெனப்
புலம்புற்றுன்வழிப்போதலுற்றானைக்
குலம்புகக்கான்றமுதியாகுறிகொண்டீ
அலம்பொற்றாரவனேயரசென்றலும். (கஉ)

வானமாளவென்றமமுனைவைத்தவன
தானுமாளக்கிளையினிறத்தடிந்
தியானுமாள்வெனிருந்தரசாள்கிலென்
னைனமானவுரைபகாந்தீரென. (கங)

பற்றியானறபடைத்தலைவீரரும்
முற்றுணர்ந்தமுதியருமுன்பரும்
எற்றுநுமரசெய்துவையாமெனக்
கொற்றநன்முடிகொண்டதக்கோதிலானே (கச)

வந்தவுன்னைவணங்கிமகிழ்ந்தனன
ந்தையெனக்கணினைத்தவராற்றலிற்
றந்தவுன்னரசென்றுதருக்கிலான
முந்தையுற்றது * சொற்றமுனிந்துநீ (கரு)

கொல்லலுற்றனையும்பியைக் † கோதவற்
றிலலையெனபதுணர்ந்துமிரங்கலை
அல்லல்செயயேலுனக்கபயமபிழை
புலலலென்னவும்புல்லலைபொங்கினாய். (கசு)

ஊற்றமுற்றுடையானுனக்காரமர்
தோற்றுமென்றுதொழுதியாகையனீ
கூற்றமுண்ணக்கொடுப்பனென்றெண்ணினாய்
நாற்றிசைக்கும்புறத்தையுநண்ணினான். (கஎ)

அன்னதன்மையறிந்துமருளலை
பின்னவன்னிவனென்பதும்பேணலை
வன்னிதானிடுசாபவரமபுடைப்
பொன்மலைக்கவனணணலிற்போந்தலை (கஅ)

‡ ஈரமாவதுமிறபிறப்பாவதும
வீரமாவதுங்கலியினமெய்ந்நெறி
வாரமாவதுமற்றொருவனபுணா
தாரமாவதுதாங்குந்தருக்கமோ (ககூ)

---

* சொற்ற-உரைத்தன.
† கோது-குற்றம்.
‡ ஈரம்-இரக்கம்.

மறந்திறம்பல்வலியமெனுமனம்
புறந்திறம்பவெளியவாப் * பொஙகுதல்
அறந்திறம்பலருஙகடிமஙகையர்
திறந்திறம்பநெறிவுடையோர்க்கெலாம். (௧௦௦)

தருமமின்னதெனுந்தகைத்தன்மையும்
இருமையுந்தெரிந்தெண்ணலையெண்ணினால
அருமை † யும்பிதனருயிரதேவியைப்
பெருமைநீஙகினையெய்தப்பெறுதியோ. (௧௦௧)

ஆதலானுமவனெனக்காருயிராக
காதலானெனலானுநிற்கட்டனென
‡ ஏதிலாருமெளியரெனவுரையும்
தீதுதீர்ப்பதென்சிந்தைதககருததரோ (௧௦௨)

பிழைததததன்மையிதுவெனப்பேரெழில
தழைததவீரனுரைசெயததக்கிலா
திழைததவாலியியல்பலவிததுணை
விழைததிறததொழிலென்னவிளம்புவான் (௧௦௩)

ஐயநுஙகளருஙகுலக்கற்பினப்
பொய்யின்மஙகையாககேய்நதபுணர்சசிபோல
செய்திலன்னைமைததேமலாமேலவன
எய்தினெய்தியதாகவியற்றினான். (௧௦௪)

மணமுமில்லைமறைநெறிவநதனை
குணமுமில்லைகுலமுதற்கொததனை
வுணர்வுசெனறுழிசசெலலுமொழுககலால்
நிணமுநெய்யுமிணஙகியநேமியாய். (௧௦௫)

பெற்றிமற்றிதுபெற்றதோர்பெற்றியிற்
குற்றமுற்றிலெனீயதுகோடியால்
வெற்றியுற்றதோவெற்றியினாயெனச
சொற்றசொற்றமைககுற்றதுசொல்லுவான். (௧௦௬)

நலங்கொடேவரிற்றோன்றிநவையறக்
கலஙகலாதறநன்னெறிகாண்டலின்
விலங்கலாமைவிளங்கியதாதலான்
§ அலங்கலாககிதடுப்பதன்றுமரோ. (௧௦௭)

---

* பொஙகுதல்-சீறுதல.
† உம்பி-உன்தம்பி.
‡ ஏதிலார்-பகைவா.
§ அலங்கலார்-இரக்கமுடையார்.

பொறியின்யாக்கையதோபுலனோக்கிய
அறிவின்மேலதன்றோவறததாறுதான்
நெறியி * னோன்மையைநோகின்றுணர்ந்தநீ
பெறுதியோபிழையுற்றுறுபெற்றிதான். (க0அ)

மாடுபற்றியிடஙகாவலித்திடக்
† கோடுபறறியகொற்றவற்கூயதோர்
பாடுபெற்றவுணாவினபயததினால்
வீடுபெற்றவிலஙகும்விலஙகரோ. (க0கூ)

சிந்தைநல்லறததினவழிசசோதலால்
பைந்தொடிததிருவின்பரிவாற்றுவான
வெநதொழிற்றிறல்வீடுபெற்றெய்திய
‡ எநதையும $ மெருவைக்கரசல்லனோ (கக0)

நன்றுதீதென்றியநெறிநலலறி
வினறிவாழவதனறோவிலஙகினனிடை
நினறநனனெறிநீயறியாநெறி
ஒன்றன்மையுன் ¶ வாயமையுணாதருமால. (ககக)

தககவினனதகாதனவினனவென
றெக்கவுனனலராயினுயாநதுள
மககளும்விலஙகேமனுவின்னெறி
புக்கவேலவவிலஙகும்புததேளிரே. (கக௨)

காலனாற்றல்கடிநதகணிசசியான்
பாலினாற்றியபததிபயததலான
மாலினாற்றருவன்பெரும்பூதஙகள்
நாலினாற்றலுமாற்றுழிநண்ணினாய். (ககங)

மேவருநதருமததுறைமேவினா
ஏவருமபவததாலிழிநதோர்களும்
தாவருந்தவருமபலதனமைசால
தேவருமமுளாதீமைதிருநதினர். (ககச)

இனையதாதலினெககுலநதியாவாககும்
வினையினாலவருமேனமையுஙகீழமையும்
அனையதனமையறிநதுமழிததனை
0 மனையின்மாட்சியெனறுன்மனுநீதியான். (ககரு)

---

* நோன்மை-தவத்திறம். † கோடு-சஙகு.
‡ எந்தையும-எனது சிறியதநதையும. $ எருவை-கழுகு.
¶ வாயமை-சொல்.
0 மனையின்மாட்சி-இல்லறதருமம்.

வேறு.

அவவுரையமையககேட்டவரிகுலததரசுமாண்ட
செவவியோயனையதாகசசெருககளததுருததெய்யாதே
வெவவிய * புளிஞரெனனவிலஙகியேமறைநதுவிலலால
எவவியதென்னையென்றானிலககுவனியம்பலுற்றான. (௧௧௬)

முனபுகினறமபிவநதுசரணபுகமுறையிலோயைத
தென்புலததுயப்பனெனறுசெப்பினன்செருவினீயும்
அன்பினையுயிருககாகியடைககலமியானுமெனறி
என்பதுகருதியண்ணனமறைநதுநினறெய்ததென்றான். (௧௧௭)

கவிகுலததரசுமன்னனகட்டுரைமனததிறகொண்டான்
அவியுறுமனததனாகியறததிறனழியசசெய்யான
புவியிடையணணலெனபதெணணினனபொருநதிமுன்னே
செவியுறுகேள்விசசெலவன்சென்னியையிறைஞசிசசொன்னான் (௧௧௮)

தாயெனவுயிரககுநலகிததருமமுந்தகவுஞசால்பும்
நீயெனநினறநமபிநெறியினினோககுநோமை
நாயெனநின்றவெமபானவையறவுணரலாமே
தீயனபொறுததியென்றான்சிறியனசிந்தியாதான். (௧௧௯)

இரநதனன்பின்னுமெநதையாவதுமெண்ண † தேற்றாக
குரஙகெனக்கருதிநாயேனகூறியமனததுககொள்ளேல
அரநதைவெம்பிறவியென்னோயககருமருந்தனையவையா
வரந்தருவள்ளாலொனறுகேளெனமறுததுஞசொலவான். (௧௨௦)

வேறு.

ஏவுகூர்வாளியாலெயதுநாயடியனேன்
ஆவிபோமவேலைவாயறிவுதநதருளினாய்
மூவாநீமுதல்வனீமுறறுநீமறறுநீ
பாவநீதருமநீபகையுநீயுறவுநீ. (௧௨௧)

புரமெலாமெரிசெய்தோனமுதலினோ ‡ பொருவிலா
வரமெலாமுருவியென்வசையிலாவலிமைசால
உரமெலாமுருவியெனனுயிரெலாங்கருநின
சரமலாற்பிறிதுவேறுளதரோதருமமே. (௧௨௨)

$ மாவலசசூலியார்வாழத்துநர்க்குயாவரம
ஓவலறறுதவனினொருதனிப்பெயரியம்
பாவலிப்புடைமையாலாகுமப்பொருளையாம்
தேவநிற்கண்டவெற்கரிதெனோதேரினே. (௧௨௩)

---

* புளிஞர்-வேடர் † தேற்றா-தெளிவிலாத ‡ பொருவிலா-ஒப்பற்ற.
$ இப்பாடல சிலவேடுகளினமாததிரங காணப்படுகினறது

யாவருமெவையுமாயிருதுவும்பயனுமாய்ப்
பூவுநல * வெறியுமொத்தொருவரும்பொதுமையாய்
ஆவனீயாவதென்றறிவினாருளினா
தாவரும்பதமெனக்கருமையோதனிமையோய். (கஉச)

உண்டெனுந்தருமமேயுருவமாயுடையநிற்
கண்டுகொண்டேனினிக்காணவென்கடவெனோ
பண்டொடின்றளவுமேயென்பெரும்பழவினைத
தண்டமேயடியனேற்குறுபதந்தருவதே. (கஉரு)

வேறு.

மற்றினியுதவியுண்டோவானினுமுயர்ந்தமானக
கொற்றவநின்னையென்னைக்கொல்லியகொணர்ந்துதொலைச
சிற்றினக்குரங்கினோடுந்தெரிவுறச்செய்தசெய்கை
வெற்றரசெய்தியெம்பி † வீட்டரசெனக்குவிட்டான். (கஉசா)

ஓவியவுருவநாயேனுளதொன்றுபெறுவதுன்பால்
பூவிய ‡ நறவமாந்திப்புந்திவேறுற்றபோது
தீவினையியற்றுமேனுமெம்பிமேற்சீறியென்மேல்
ஏவியபகழியென்னுங்கூற்றினையேவலென்றான். (கஉஎ)

இன்னுமொன்றிரப்பதுண்டாலெம்பியையும்பிமார்கள்
தன்னைக்கொல்வித்தானென்றிகழ்வரேற்றடுத்திதக்கோய
முன்முனேமொழிந்தாயன்றேயிவன்குறைமுடிப்பதையா
பின்னவன்வினையின்செய்கையதனையும்பிழைக்கலாமோ. (கஉஅ)

மற்றிலெனெனினுமாயவரக்கனைவாலிற்பற்றிக்
கொற்றவநின்கட்டந்துகுரக்கியற்றொழிலுங்காட்டப்
பெற்றிலென்கடந்தசொல்லிற்பயனிலைப்பிறிதொன்றேனும
முற்றதுசெய்கென்றாலுமுரியனிவ்வனுமனென்றான். (கஉகூ)

அனுமனென்பவனையாழியையநின்செய்யசெங்கைத்
தனுவெனநினைதிமற்றென்றம்பிநின்றம்பியாக
நினைதியோதுணைவரின்றோரனையவரிலைநீயீண்டவ
வனிதையைநாடிக்கோடிவானினுமுயர்ந்ததோளாய். (கங0)

என்றவற்கியம்பிப்பின்னரிருந்தனனிளவறனை
வன்றுணைத்தடக்கைநீட்டிவாங்கினன்றழுவிமைந்த
ஒன்றுனக்குரைப்பதுண்டாலுறுதியஃதுணர்ந்துகோடி
குன்றினுமுயர்ந்ததோளாய்வருந்தலையென்றுகூறும். (கஙக)

* வெறி-மணம.

† வீட்டரசு-முத்தித்தானங்களுளுயர்ந்த பரமபதம்.

‡ நறவமாந்தி-கட் குடித்து.

மறைகளுமுனிவர்யாருமலர்மிசையயனுமற்றைத்
துறைகளின்முடிவுஞ்சொல்லுந்துணிபொரு * டுணிவிற்றாகி
அறைகழலிராமனாகியறநெறிநிறுத்தவந்த
இறையொருசங்கையின்றியெண்ணுதியெண்ணமிக்கோய். (க௬௨)

† நிற்கின்றசெல்வமவேண்டிநெறிநின்றபொருள்களெல்லாம்
கற்கின்றவிவன்றனுமங்கருதுவவிவினைக்கண்டாய
பொற்குன்றமனையதோளாய்பொதுநின்றதலைமைநோக்கின
ஏற்கொன்றவலியேசாலுமிதற்கொன்றுமேதுவேண்டா. (க௬௩)

கைதவமியற்றியாண்டுங்கழிப்பருங்கணக்கிறீமை
வைகலும்புரிந்துளாரும் ‡ வானுயர்நிலையைவள்ளல
எய்தவர்பெறுவரென்றாலிணையடியிறைஞ்சியேவல
செய்தவர்பெறுவதையார்செப்பலாந்தன்மைத்தாமோ. (க௬௪)

அருமையென்விதியினாரேயுதவுவானமைந்தகாலை
இருமையுமெய்தினாய்மற்றினிச்செயற்பாலதெண்ணின்
திருமறுமார்பனேவல்சென்னியிற்சோதிச்சிந்தை
ஒருமையினிறுவிமும்மையுலகினுமுயர்தியன்றே. (க௬௫)

மதவியல்குரக்குச்செய்கைமயர்வொடுமாற்றிவள்ளல்
உதவியையுன்னியாவியுற்றிடத்துதவுகிற்றி
பதவியையெவர்க்குநல்கும்பண்ணவன்பணித்தயாவும்
§ சிதைவிலசெய்துநொய்திற்றீர்வரும்பிறவிதீர்தி. (க௬௬)

அரசியற்பாரம்பூரித்தயாந்தனையிகழாதையன்
மரைமலர்ப்பாதங்காவாழுதிமன்னரென்பார்
எரியனற்குரியாரெனறேயெண்ணுதியெண்ணம்யாவும்
புரிதிசிற்றடிமைக்குற்றம்பொறுப்பரென்றெண்ணவேண்டா. (க௬௭)

என்னவித்தகையவாயவுறுதிகள்யாவுமெங்கும
பின்னவற்கியம்பிநின்றபேரெழிலானைநோக்கி
மன்னவாக்கரசன்மைந்தமற்றிவன்சுற்றத்தோடும்
உன்னடைக்கலமென்றுந்தியுயர்கரமுச்சிவைத்தான். (க௬௮)

வைத்தபினுரிமைத்தம்பிமாமுகநோக்கிவல்லே
உய்த்தனைகொணர்தியென்றனோங்கருமகனையென்ன
அத்தலையவனையேவியழைத்தலினணைந்தானனைய
கைத்தலத்துவரிநீரைக்கலக்கினன்பயந்தகாளை. (க௬௯)

---

* துணிவிலெனற்பாலது-துணிவிலென்றாயது.
† நிற்கின்றசெல்வம்-இடையிலழியாத பரமபதச்செல்வம்.
† வானுயர்நிலை-வானத்திலுயர்ந்தவிடம்.
§ சிதைவில்-சிதைவிலவாக.

சுடருடைமதியமென்னத்தோன்றினன்றோன்றியாண்டும்
இடருடையுள்ளத்தோரையெண்ணினுமுணர்ந்திலாதான்
மடருடைநறுமெனசேக்கைமலையன்றியுதிரவாரிக
கடரிடைகிடந்தகாதற்றாதையைக்கண்ணிற்கண்டான். (௧௪0)

கண்டனன்கலுழிநீருங்குருதியுங்காலமாலைக்
குண்டலமலம்புகின்றகுவவுத்தோட்குரிசிறிங்கள்
மண்டலமுலகிலவந்துகிடந்ததம்மதியின்மீதா
விண்டலந்தன்னினின்றோ * மீன்விழுந்தென்னவீழ்ந்தான். (௧௪௧)

எந்தையேயெந்தையேயிவ்வெழுதிரைவளாகத்தியார்க்கும
சிந்தையாற்செய்கையாலோர்தீவினைசெய்திலாதாய்
நொந்தனையதுதானிற்கநின்முகநோக்கிக்கூற்றம
வந்ததேயன்றேவஞ்சாதாரதன்வலியைத்தீர்ப்பார். (௧௪௨)

தறையடித்ததுபோற்றீராத்தகையவித்திசைகடாங்கும்
கறையடிக்கழிவுசெய்த † கண்டகனெஞ்சமுன்றன்
நிறையடிக்கோலவாலிநிலைமையையுன்னுந்தோறும்
பறையடிக்கின்றதந்தப்பயமறப்பறந்ததன்றே. (௧௪௩)

குலவரைநேமிக்குன்றமென்றவாலுயர்ந்தகோட்டின
தலைகளுநின்பொற்றோளிற்றழும்பினித்தவிர்ந்தவன்றே
மலைகொளுமரவுமற்றுமதியமுமபலவுந்தாங்கி
அலைகடல்கடையவேண்டினாரினிக்கடைவரையா. (௧௪௪)

பஞ்சின்மெல்லடியாள்பாகன்பாதுகமல்லயாவும்
அஞ்சலித்தறியாச்செங்கையாணையாயமரர்யாரும்
எஞ்சலிலிருந்தாருன்னாலின்னமுதீந்தநீயோ
துஞ்சினை ‡ வள்ளியோர்கணின்னின்யாரசொல்லற்பாலார். (௧௪௫)

ஆயனபலவும்பன்னியழுங்கினன்புழுங்கிநோக்கித்
தீயுறுமெழுகிற்சிந்தையலமருஞ்செங்கண்வாலி
நீயினியயாவாயலவையென்றுதன்னெஞ்சிற்புல்லி
நாயகனிராமன்செய்தநல்வினைப்பயனிதென்றான். (௧௪௬)

தோன்றலுமிறத்தருணுந்துகளறத்துணிந்துநோக்கின
மூன்றுலகத்திற்றோகுமூலத்தேமுடி[illegible]
யான்றவமுடைமையாலியலிறுதியி[illegible]
சான்றெனநின்றவீ[illegible] (௧௪௭)

* மீன-நட்சத்திரம்.

† கண்டகன்-கொடியவனை.

‡ வள்ளியோர்-கொடையாளர்.

பாலமைதவிர்நீயென்சொற்பற்றுதியென்னினையா
மேலொருபொருளுமில்லாமெய்ப்பொருள்வில்லுந்தாங்கிக்
கால்தரைதோயநின்றுகட்புலக்குற்றதம்மா
மால்தரும்பிறவிநோய்க்குமருந்தெனவணங்குமைந்த. (க௪அ)

என்னுயிர்க்கிறுதிசெய்தானென்பதை * யிறையுமெண்ணா
துன்னுயிர்க்குறுதிசெய்தியிவற்கமருற்றதுண்டேல்
பொன்னுயிர்த்தொளிரும்பூணாய்போதிநீநிலைமைநோக்கி
மன்னுயிர்க்குறுதிசெயவான்மலரடிசுமந்துவாழுதி. (க௪௯)

என்றனனினையவாயவுறுதிகள்யாவுஞ்சொல்லித்
தன்றுணைத்தடக்கையாரத்தனயனைத்தழுவிச்சாலக்
குன்றினுமுயர்ந்ததிண்டோட்குரக்கினத்தரசன்கொற்றப்
பொன்றிணிவயிரப்பைம்பூட்புரவலன்றனைநோக்கி. (க௫0)

நெய்யடைநெடுவேற்றானைநீனிறநிருதரென்னும்
துய்யடைக்கனலியன்னதோளினன்றொழிலுந்தூயன்
பொய்யடையுள்ளத்தார்க்குப்புலப்படாப்புலவமற்றுன்
† கையடையாகுமென்றவ்விராமற்குக்காட்டுங்காலை. (க௫க)

தன்னடிதாழ்தலோடுந்தாமரைத்தடங்கண்ணும்
பொன்னுடைவாளைநீட்டிநீயிதுபொறுத்தியென்றான்
என்னலுமுலகமேழுமேத்தினவிறந்துவாலி
அந்நிலைதுறந்துவானுக்கப்புறத்துலகனானான். (க௫௨)

கையவணெகிழ்தலோடுங்கடுங்கணைகாலவாலி
வெய்யமார்பகத்துட்டங்காதுருவிமேக்குயர்மீப்போய்த்
தூயநீர்க்கடலுட்டோய்ந்துதூய்மலரமரர்சூட்ட
ஐயன்வெவ்விடாதகொற்றத் ‡ தாவம்வந்தடைந்ததன்றே. (க௫௩)

௭-வது, வாலிவதைப்படலம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௧௧.

---

* இறையும்-சிறிதும்.

† கையடை-அடைக்கலம்.

‡ ஆவம்-அம்புக்கூடு.

௮-வது, அரசியற்படலம்.

வாலியுமேகினான்விண்வரம்பிலாவாற்றலோடும்
பாலியாமுன்னாநின்றபரிதிசேய்செங்கைபற்றி
ஆலிலைப்பள்ளியானுமங்கதனோடும்போனான்
வேல்விழித்தாரைகேட்டாள்வந்தவன்மேனிவீழ்ந்தாள். (௧)

குங்குமங்கொட்டியன்னகுவிமுலைக் * குவட்டிற்கொக்கப்
பொங்குவெங்குருதிபோரப்பப்புரிகுழல்சிவப்பப்பொற்றோள்
அங்கவனலங்கன்மார்பிற்புரண்டனளகன்றசெக்கர்
வெங்கதிர்விசும்பிற்றோன்றுமின்னெனத்திகழுமெய்யாள். (௨)

வேய்ங்குழல்விளிகொணல்யாழ்வீணையென்றினையநாண
ஏங்கினளிரங்கிவிம்மியுருகினளிருகை † கூப்பித்
தாங்கினடலையிற்சோர்ந்துசரிந்துதாழ்குழல்கடள்ளி
ஓங்கியகுரலாற்பன்னியினையனவுரைககலுற்றாள் (௩)

வேறு.

வரைசேர்தோளிடைநாளும்வைகுவேன்
கரைசேரா ‡ விடாவேலைகாணகலேன
உரைசேராருயிரேயெனுள்ளமே
அரைசேயாளிதுகாணவஞ்சினேன். (௪)

துயராலேதொலையாதவென்னையும்
§ பயிராயோபகையாதபண்பினோய்
செயிர்தீராய்விதியானதெய்வமே
உயிர்போனாலுடலாருமுயவரோ (௫)

நறிதாநலலமிழ்துணணநல்கலின்
பிறியாவின்னுயிர்பெற்றபெற்றிதாம்
அறியாரோநமனாரதன்றெனின்
சிறியாரோவுபகாரஞ்சிந்தியார். (௬)

அணங்கார்பாகனையாசைதோறுமுற்
றுணங்காவொண்மலர்கொண்டுளன்பொடும்
இணங்காக்காலமிரண்டொடொன்றினும
வணங்காதித்துணைநவலலையோ. (௭)

* குவடு-மலை.
† கூப்பி-சேர்த்து.
‡ இடர்வேலை-துக்கசமுத்திரம்.
§ பயிராயோ-அழையாயோ,

வரையார்தோள்பொடியாடவைகுவாய்
தரைமேலாயுறுதன்மையீதெனக
கரையாதேனிடுபூசல்கண்டுமொன்
றுரையாயெனவயினானம்யாவதோ. (௮)

நையாநின்றனனானிருந்திங்ஙன்
மெய்வானோதிருநாடுமேவினாய
ஐயாநீயெனதாவியென்றதும்
பொய்யோபொய்யுரையாதபுண்ணியா. (௯)

செருவார்தோளநின்சிந்தையுளெனெனின்
* மருவார்வெஞ்சரமெனையும்வௌவுமால்
ஒருவேனுள்ளுளையாகிலுய்தியால்
இருவேமுள்ளிருவேமிருந்திலேம். (௧௦)

எந்தாய்நீயமிழ்தீயயாமெலாம்
உய்ந்தாமென்றுபகாரமுன்னுவார
நந்தாநாண்மலர்சிந்திநண்பொடும்
வந்தாரோவெதிர்வானுளோரெலாம். (௧௧)

ஓயாவாளியொளித்துநின்றெய்வானை
ஏயாவந்தவிராமனென்றுளான்
வாயாலேயினனென்னினவாழ்வெலாம்
ஈயாயோவமிழ்தேயுமீகுவாய். (௧௨)

சொற்றேன்முந்துறவன்னசொற்கொளாய்
அற்றானன்னதுசெய்கலானனோ
உற்றாயும்பியை † யூழிகாணுநீ
இற்றானுனையென்றுகாண்கேனோ. (௧௩)

நீறாமேருவுநீநெருக்கினால்
மாறோர்வாளியுன்மார்பையீர்வதோ
தேறேன்யானிதுதேவர்மாயமோ
வேறோர்வாலிகொலாம்விளிந்துளான். (௧௪)

தகைநேர்வண்புகழ்நின்றுதம்பியார்
பகைநேர்வாருளரானபண்பினால்
உகநேர்சிந்தியுலந்தழிந்தவால்
மகனேகண்டிலையோநம்வாழ்வெலாம். (௧௫)

அருமந்தற்றமகற்றும்வில்லியார்
ஒருமைந்தற்குமடாததுன்னினார்

---

* மருவார்-பகைவர். † ஊழி-அழிவு.

தருமம்பற்றியதககவர்கெகலாம
கருமஙகட்டளெயெனறல * கட்டதோ. (கசு)

என்றுனினனனபன்னியின்னலோ
டொன்றுவுள்ஞணாவேதுமுற்றிலாள்
நின்றுளந்நிலேநோககிநீதிசால்
வனறுண்மாலவரையன்னமாருதி. (கஎ)

மடவாராலமடநதைமுன்னாவாழ
இடமேவும்படியேவிவாலிபால்
கடன்யாவுஙகடைகண்டுகெணணேறு
டுடனுவுற்றவெலாமுணாததனும. (கஅ)

அகம்வேரற்றுகவிசருக்கனோ
புகுமேலேக்கிரிபுககபோழதினின
நகமேயொததகுரக்குநாயகன
முகமேயொததமுரிமணடிலம. (ககூ)

மறைநதான்மாலேயருக்கன்வள்ளியோன
உறைநதான்மஙகைதிறததைபுன்னுவான்
குறைநதானெஞசுகுழைநதழுஙகுவான
நிறைநதாாகஙகுலினவேலேநீநதினுன். (உ0)

புதல்வன்பொன்மகுடம் † பொறுத்தலான்
முதல்வன்பேருவகைககுமூநதுவான
உதவும்பூமகள்சேரவொணமலாக
கதவஞசெய்யகரததினீககினுன். (உக)

அதுகாலத்திலருட்குநாயகன்
மதிசாறமபியைவல்லேயேவினுன்
கதிரோனமைநதனேயையகைகளால
விதியான்மௌலிமிலேசசுவாயெனு (உஉ)

அப்போதேயருணினறவண்ணனும்
மெயப்போாடாருதிதன்னேவீரநீ
இப்போதேகொணரினனசெயவினைக
கொப்பாம்யாவையுமென்றுணாததனும. (உ௩)

‡ மணணுநநீாமுதன்மஙகலஙகளும்
எண்ணும்பொன்முடியாதியாவையும

---

* கட்டதோ-பொய்யோ.
† பொறுத்தலான்-தரிததலால்.
‡ மண்ணும-அபிடேகிக்கின்ற.

நண்ணும்வேலையினம்பிதம்பியும்
திணணஞ்செயவனசெய்துசெம்மலை. (௨௪)

மறையோராசிவழஙகவானுளோா
நறைதோய்நாண்மலாதூவநன்னெறிக்
கிறையோர்முனவினைசெயயவேநதலைத
துறையோாநூன்முறைமெளலிசூட்டினன். (௨௫)

பொனமா * மெளலிபுனைநதுபொயயிலான்
தன்மானககழுஉழும்வேலையின்
நன்மாாபிற்றழுவுற்றுநாயகன்
சொனனன்முறறியசொலலினெல்லையான். (௨௬)

வேறு.

ாண்டுநின்றேகிநீங்கினனியலபமையிருககையெய்தி
வேண்டுவமரபினெண்ணிவிதிமுறையியற்றிவீர
பூண்டபேரரசுககேற்றயாவையும்புரிநதுபோரில்
மாணடவன்மைநதனேடும்வாழதிநறறிருவினவைகி. (௨௭)

வாய்மைசாலறிவினவாயததமநதிரமாநதரோடும்
தீமைதீராழுககினவநததிறதொழின்மறவரோடும்
தூய்மைசால் † புணாசசிபேணிததுகளறுதொழிலையாகிச
சேய்மையோடணிமையினறிததேவரிற்றெரியநிறறி. (௨௮)

புகையுடைததென்னினுண்டுபொஙகனலஙகென்றுனனும்
மிகையுடைததுலகநூலோாவினையுமவேண்டறபாறறே
பகையுடைசசிந்தையாககும்பயனுறுபண்பிற்றீரா
நகையுடைமுகததையாகியின்னுரைநலகுநாவால. (௨௯)

தேவருமருடற்கொததசெயிாறுசெல்வமஃதுன்
காவலுக்குரியதென்றுலனனதுகருதிககாணடி
ஏவருமினியநணபரயலவாவிாவாரென்று
மூவகையியலோாாவாமுனைவாககுமுலகமூன்றின். (௩0)

செய்வனசெயதல்யாணடுந்தீயனசிநதியாமல்
வைவனவந்தபோதும்வசையிலவினியகூறல்
மெய்சொலல்வழஙகல்யாவுமேவினவெஃகலின்மை
உய்வனவாககிததம்மோடுயர்வனவுவந்துசெய்வாய். (௩க)

சிறியரென்றிகழ்ந்துநோவுசெய்வனசெய்யன்மற்றிந்
நெறியிகந்தியானோதீமையிழைததலாலுணர்சசிநீண்டு

---

* மெளலி-மகுடம்.
† புணர்சசிபேணி-கலந்தாலோசிதது

குறியதாமேனியாயகூனியாற்குவவுத்தோளாய்
வெறியனவெய்தினொய்தின்வெநதுயர்க்கடலின்வீழ்ந்தேன். (௩௨)

மஙகையாபொருட்டாலெய்துமாந்தாககுமரணமென்றல்
சஙகையின்றுணாதிவாலிசெய்கையாற்சாலுமின்னும்
அஙகவாதிறததிறேனேயல்லலுமபழியுமாதல்
எஙகளிற்காண்டியனறேயிதனின்வேறுறுதியுண்டோ. (௩௩)

நாயகனலலனம்மைநனியயாநதெடுத்துநல்கும்
தாயெனவினிதுபேணததாஙகுதிதாஙகுவாரை
ஆயதுதனமையேனுமறவரம்பிகவாவண்ணம்
தீயனவநதபோது * சுடுதியாறறீமையோரை. (௩௪)

இறததலும்பிறததருஉனுமெனபனவிரணடும்யாணடும்
திறததுளிநோககிற்செயதவினைதரதெரிந்தவன்றே
புறத்தினியுரைப்பதெனனேபூவின்மேற்புனிதற்கேனும்
அறததினதிறுதிவாழ்நாட்கிறுதியஃதுறுதியென்ப. (௩௫)

ஆக்கமுஙகேடுந்தாஞ்செயறததொடுபாவமாய
போககிவேறுண்மைதேறாபொருவரும்புலமைநூலோர்
தாககினவொனறேயொன்றுதருக்குறுஞ்செருவிற்றக்கோய்
பாககியமன்றியொனறும்பாவததைப்பற்றலாமோ. (௩௬)

இன்னதுதகைமையென்பவியலபுளிமரபினெண்ணி
மன்னரசியற்றியென்கண்வருவழிமாரிககாலம
பினனுறமுறையினுனறனபெருஙகடறசேனையோடும்
† துன்னுதிபோதியெனறனசுநதரனவனுஞ்சொலவான. (௩௭)

குரஙகுறையிருககையென்னுஙகுற்றமேகுறறமல்லால
அரஙகுறுதுறககநாட்டுககரசெனலாயதன்றே
மரஙகிளரருவிக ‡ குன்றமவள்ளனீமனத்தினைமமை
இரஙகியபணியாஞ்செயய விருததியாறசின்றென்மபால். (௩௮)

§ அரிநதமனினையண்மியருளுககுமுரியேமாகிப்
பிரிநதுவேறெயதுஞ்செலவம்வெறுமையிற்பிறிதொன்றேமோ
கருநதடஙகணணிஞேனநாடலாஙகாலஙகாறும்
இருநதருடருதியெமமோடெனறடியிணையினவீழநதான (௩௯)

ஏநதலுமிதனைககேளாவினனிளமுறுவ $ ஞற
வேந்தமையிருககையெமபோலவிரதியாவிழைததறகொவவா

---

* சுடுதி - தண்டித்தி † துன்னுதி - அடைவாய்.
‡ குன்றம - குன்றத்தில்.
§ அரிநதம - நாராயணனே.
$ நாற - தோனற

போநதவணிருப்பினெம்மைப்போற்றவேபொழுதுபோமால்
சோந்தனைநிற்கமுன்பவவரசியற்றருமநீர்தி. (௪௦)

ஏழிரண்டாண்டியான்போந்தெரிவனததிருக்கவேண்றேன்
வாழியாயரசாவைகுமவளநகர்வைக * லொலலேலன
பாழியந்தடநதோள்வீரபார்ததிலைபோலுமன்றே
யாழிசைமொழியோடன்றியானுறையின்பமென்றே. (௪௧)

† தேவியீவறரககன்வைததசேமததுளிருப்பததானறன்
ஆவிபோற்றுணைவரோடுமௌவிடற்கரியவினபம
மேவினனிராமனென்றலையவிவவெய்யமாற்றம
மூவகையுலகமுற்றுஙகாலததுமுற்றவற்றே. (௪௨)

இலலறந்துறநதிலாதோரியறகையையெதிாந்துபோரின
வில்லறந்துறந்துவாழவேறகின்னனமேன்மையிலலாச
சில்லறமபுரிந்துநின்றதீமைகடருமாறு
நல்லறநதுறநதநோனபினவையறநோற்பலெனறான. (௪௩)

அரசியறகுரியயாவுமாறறுழியாறறியானற
திரைசெயற்குரியசேனைககடலொடுந ‡ திஙகளனைகின
§ விரசுகவெனபாணினனைவேணடினெனவீரவெனறான
உரைசெயற்கெளிதுமாகியரிதுமாமொழுககினினறான. (௪௪)

மறித்தொருமாற்றஙகூறான்வானுயாதோறறதன்றன
குறிப்பறிநதொழுகன்மாதோகோதிலராதலெனறு
நெறிப்படாகண்கள்பொஙகிநீர்வரநெடிதுதாழநது
பொறிப்பருந்துன்பமுனறுககவிககுலததரசனபோனான. (௪௫)

வாலிகாதலனுமாண்டுமலரடிவணஙகினனை
நீலமாமேகமன்னநெடியவனருளிநோககிச
சீலநீயுடையையாதலிவன்சிறுதாதையென்று
மூலமேதநதநுந்தையாமெனமுறையினிறறி. (௪௬)

என்னமற்றினையகூறியேகவறனெறடரவெனறான
பொன்னடிவணஙகிமற்றப்புகழுடைககுரிசில்போனான
பின்னர்மாருதியைநோககிப்பேரெழில்வீரநீயும்
அன்னவனரசுககேற்றதாற்றுதியறிவினெனறான. (௪௭)

பொய்ததலிலுள்ளத்தன்புபொழிகின்றபுணர்ச்சியானும்
இததலையிருந்துநாயேனேயினவெனககுத்தகக

* ஒல்லேன்-கூடாதவனாக இருககின்றேன்.
† தேவி-சானகி.
‡ திஙகள்-மாதம
§ விரசுக-சோவாயாக.

கைதொழில்செய்வேனென்றுகழலிணைவணங்குங்காலை
மெய்த்தலைநின்றவீரனிவ்வுரைவிளம்பிவிட்டான். (௬அ)

நிரம்பினுனொருவன்காத்தநிறையரசிறுதிநின்ற
வரம்பிலாததனைமற்றோர்தலைமகனவலிதிற்கொண்டால்
* அரும்புவநலனுநீங்குமாகலினையநினபோற்
பெரும்பொறையறிவினோரானிலையினைப்பெறுவதம்மா. (௬௯)

† ஆன்றவற்குரியதாயவரசினைநிறுவியப்பால்
ஏனறெனகுரியதாயகருமமுமியற்றற்கொதத
சான்றவாநினனினிலலையாகலாறறுமநதானே
போனறீயானேவேண்டவததலைபோதியெனறுன. (௭0)

ஆழியானனையகூறவாணையீதாகினஃதே
வாழியான்புரிவேனென்றுவணஙகிமாருதியும்போனன
சூழிமால்யானையன்னதமபியுந்தானுநதொலலை
ஊழிநாயகனும்வேறுயாதடஙகுனறமுற்றுன். (௭௧)

ஆரியனருளிற்போயவவகன்மலையகததுய
சூரியனமகனுமானததுணைவருஙகிளையுஞசுற்றத
தாரையைவணஙகியன்றோடயெனததந்தைமுநதைச
சீரியன்சொல்லேயெனனசசெவவிதினரசுசெய்தான. (௭௨)

வளவரசெயதிமற்றைவானரவீராயாரும்
கிளைஞரினுதவவாணைகிளாதிசையளப்பகேளோ
டளவிலவாறறலாணமையஙகதனறஙகள்செலவத
திளவரசியற்றவேவியினிதினிருநதானிப்பால. (௭௩)

‡ வள்ளலுமவணின்றேகிமதஙகனதிருக்கையாய
வெள்ளவானகுடுமிக்குன்றதொருசிறைறமேவிமெய்ம்மை
அளஞுறுகாதற்றம்பியன்பினுலமைககப்பட்ட
எள்ளலிலசாலையெய்தியினிதினிருநதகாலை. (௭௪)

அ-வது, அரசியற்படலம்-முற்றிற்று
ஆஉ திருவிருததம-சாஙஙு.

---

* அரும்புவ-தோன்றுவ.
† ஆன்றவா-உயாநதோர்
‡ வள்ளல-வரையாதுகொடுப்போன்.

* ௯ - வது, கார்காலப்படலம்.

இதுமுதல் ௫௦-பாடல்கள் மழைக்கால வருணனை.

மாவியல்வடதிசைநின்றுவானவன்
ஓவியமேயெனவொளிக்கவின்குலாம
தேவியைநாடியமூந்திதென்றிசைக
கேவியதூதெனவிரவியேகினான. (க)

† பையணைப்பஃறலைப்பாந்தளேந்திய
மொய்ந்நிலத்தகளியின்முழுங்குநீர்நெயின
வெய்யவனவிளக்கமாமேருப்பொற்றிரி
மையெடுத்தொத்ததுமழைத்தவானமே. (உ)

‡ நண்ணுதலருங்கடனஞ்சநுங்கிய
கண்ணுதல்கண்டத்தின்காட்சிகாணலாய்
விண்ணகமிருண்டதுவெயிலினவெங்கதிா
தண்ணியமெலிந்தனதழைத்தமேகமே. (௩)

நஞ்சினினளிர்நெடுங்கடலினங்கையா
அஞ்சனநயனத்தினவிழந்தகூந்தலின்
வஞ்சனையரக்கர்தம்வடிவிற்செய்கையின
நெஞ்சினினிருண்டதுநீலவானமே. (௪)

நாட்களினளிர்கடன்றூரநாவுற
வேட்கையிற்பருகியமேகமின்னுவ
வாட்கைகண்மயங்கியசெருவின்வார்மதப்
§ பூட்கைகணிறைந்தபுண்டிறப்பபோன்றவே (௫)

நீனிறப்பெருங்கரிநிரைத்தநீர்தெனச
சூனிறமுகிற்குலந்துவன்றிசூழ்திரை
மானிறநெடுங்கடல்வாரி $ மூரிவான்
மேனிரைத்துளதெனமுழக்கமிக்கதே. (௬)

அரிப்பெரும்பெயரவன்முதலினோரணி
விரிப்பவுமொத்தனவெற்புமீதுதீ
எரிப்பவுமொத்தனவேசிலாசைகள்
சிரிப்பவுமொத்தனதெரிந்தமின்னெலாம. (௭)

---

* கார்காலம்-மேகங்கள் மழைபெய்யுங்காலம்.

† பையணை-விடப்பையினையுடைய பாம்பாகிய அணை. இஃது ஆகு பெயர். ‡ நண்ணுதலரும்-அருகிலடைதற்கரிய.

§ பூட்கை-யானை. $ மூரி-பெரிய.

* மாதிரக்கருமகன்மாரிககார்மழை
யாதினுமிருண்டவிண்ணிருநதைககுப்பையின்
கூதிராவெஙகானெடுநதுருததிககோளமைத
தூதுவெஙகனலுமிழுலையுமொத்ததே. (௮)

பிரிந்துறைமகளிரும்பிலததபாந்தளும்
எரிநதுயிர்நடுஙகிடவிரவியின்கதிர
அரிநதனவாமெனவசனிநாவென
விரிநதனதிசைதொறுமிசையின்மின்னெலாம். (௯)

சூடினமணிமுடிததுகளின்விளைசையா
கூடுறைநீக்கியகுருதிவாட்களும்
ஆடவர்பெயர்தொறுமாசையானையின்
ஓடைகளொளிபிறழவனவுமொதததே. (௧௦)

எண்வகைநாகங்கடிசைகளெட்டையும்
நண்ணினநாவளைத்தனையமின்னகக்
† கணணன்மெய்வடிவெனககருகிககாவிசும்
புணணிறையுயிர்ப்பென ‡ ஊதைபொஙகவே. (௧௧)

தலைமையுங்கீழ்மையுநதவிர்தலின்றியே
மலையினுமரத்தினுமற்றுமுற்றினும்
விலஙினநதுளவழிவிலஙகும்வேசையா
உலைவுறுமனமெனவுலாயதூதையே. (௧௨)

அழுங்குறுமகளிர்த § மன்பாத்தீநதவர்
புழுஙகுறுபுணாமுலைகொதிப்பப்புககுலாய்
கொழுஙகுறைததசையெனவீாநதுகொண்டது
விழுஙகுறுபேயெனவாடைவீஙகிற்றே. (௧௩)

ஆததெழுதுகள்விசுமபடைததலானுமின்
கூாததெழுவாளெனப்பிறழுஙகோட்பினும்
தாரப்பெரும்பணையின்விண்டழுஙகுதாவினும்
போரப்பெருஙகளமெனப்பொலிநததுமபரே. (௧௪)

இன்னகைசசனகியைப்பிரிநதவேநதன்மேல்
மனமதன்மலாக்கணைவழஙகினானெனப்
பொன்னெடுஙகுனறினமேற்பொழிநததாரைகள்
மின்னொடுந்துவன்றினமேகராசியே. (௧௫)

---

* கருமகன - கொல்லன், இரும்புவேலைசெய்பவன்.
† கணணுதன் மிடறெனககருதி எனறும்பாடம்.
‡ ஊதை - ஒருவகைக் காற்று
$ அன்பர் - நாயகர்,

கல்லிடைப்படுந்துளித்திவலைகாரிடு
வில்லிடைச்சரமெனவிசையின்வீழ்ந்தன
* செல்லிடைப்பிறந்தசெங்கனல்கள்சிந்தின
வல்லிடைமணிசிறந்தழலியற்றல்போல. (௧௬)

† மள்ளர்கணமறுபடைமானயானைமேல
வெள்ளிவேலெறிவனபோன்றமேகங்கள்
தள்ளருந்துளிபடத்தகர்ந்துசாய்கிரி
புள்ளிவெங்கடகரிபுரள்வபோன்றவே. (௧௭)

வாளிடுதனுநெடுங்கருப்புவின்மழை
மீனெடுங்கொடியவன்பகழிவீழ்துளி
தானெடுஞ்சாதுணைபிரிந்ததன்மையா
ஊனுடையுடம்பெலாமுழுகவொத்தவே. (௧௮)

‡ தீர்த்தனுங்கவிகளுஞ்செறிந்தும்பகை
போர்த்தனரினியெனப்பேசிவானவர்
ஆர்த்தெனவார்த்தனமேகமாயமலர்
தூர்த்தனவொத்தனதுள்ளிவெள்ளமே (௧௯)

வண்ணவிற்கரதலத்தரக்கனவாளினை
விண்ணிடைக்கடிந்துகொண்டேகும்வேலையில்
பெண்ணினுக்கருங்கலமனையபெய்வளை
கண்ணெனப்பொழிந்ததுகாலமாரியே. (௨௰)

சிரஞ்சுடர்மதிபுனைதேவனவிண்டொடா
புரஞ்சுடவிடுசரம்புரையுமின்னினம
அரஞ்சுடப்பொறிசிமிர § யிலினுடைவா
உரஞ்சுடவுளைந்தனபிரிந்துளோர்கெலாம். (௨௧)

பொருடரப்போயினர்ப்பிரிந்தபொய்யுடற்
குருடருதேர்மிசையுயிர்கொண்டுய்த்தலான்
மருடருபிரிவினோய $ மாசுணங்கெடக்
கருடனைப்பொருவினகாலமாரியே. (௨௨)

முழங்கினமுறைமுறைமூரிமேகநீர்
வழங்கினமிடைவனமானயானைகள்
தழங்கினமொழிமதத்திவலைதாழ்தரப்
புழுங்கினவெதிரெதிர்பொருவபோன்றவே. (௨௩)

---

* செல்-மேகம். † மள்ளர்-போர்வீரர்.
‡ தீர்த்தன்-தூயவன், ஈண்டிராமன்மேற்று.
§ அயில-வேலாயுதம். $ மாசுணம்-பாம்பு.

விசைகொடுமாருதமறித்துவீசலால்
அசைவுறுசிறுதுளியப்புமாரியின்
இசைவுறவெய்யவனவியையவவாயிருந்
திசையொடுதிசைசெருச்செய்தவொத்தவே. (௨௪)

விழையுறுபொருடரப்பிரிந்தவேந்தாவந
துழையுறவுயிருறவுயிர்க்குமாதரின்
மழையுறமாமுகமலர்ந்துதோன்றின
குழையுறப்பொலிந்தன * வுலவைக்கொம்பெலாம். (௨௫)

வேறு.

பாடலம்வறுமைகூரப்பகலவன்பசுமைகூரக்
கோடல்கள்பெருமைகூரக்குவலயஞ்சிறுமைகூர
ஆடினமயில்கள்பேசாதடங்கினகுயில்களன்பாத்
தேடுறத்தளர்ந்தார்போன்றுந்திருவுறக்கிளர்ந்தார்போன்றும். (௨௬)

நாணிறச்சுரும்பும்வண்டுநன்மணியணியுஞ்சாரற்
றேனுகமலர்ந்துசாய்ந்தசேயிதழ்க்காந்தட்செம்பூ
வேணிலைவென்றதம்மாகாரெனவியந்துநோக்கி
மாணிலக்கிழத்திகைக்கணமறித்தனபோன்றமன்றே (௨௭)

வாளெயிற்றரவம்போலவன்றலைகான்றமானத்
தாளுடைக்கோடற்றம்மைத்தழீஇயனகாதறங்க
மீளலவவையுமன்னவிழைவனவுணர்வுவீந்த
கோளரவென்னப்பின்னியவறனொடுங்குழைந்துசாய்ந்த. (௨௮)

எள்ளிடவிடனுமின்றியெழுந்தனவிலங்கு † கோபம்
தள்ளுறத்தலைவாதம்மைப்பிரிந்தவாதழீஇயதூமக்
கள்ளுடையோதியார்தங்கலவியிற்பலகாற்கான்ற
வெள்ளடைத்தம்பற்குப்பைசிதர்ந்தெனவிரிந்தமாதோ. (௨௯)

தீங்கனிநாவலோங்குஞ்சேணுயர்குன்றிற்செம்பொன்
ஞாங்கினகொண்டுபோரின்மண்டுமாலயாறுமான
வேங்கையின்மலருங்கொன்றைவிரிந்தனவீயுமீர்த்துத்
தாங்கினகலுழிசென்றுதலைமயக்குறுவதம்மில. (௩0)

நலனெடுங்காந்தட்போதினறைவிரிகடுக்கைமென்பூத்
துன்னியகோபத்தோடுந்தோன்றியதோற்றந்தும்பி
இன்னிசைமுரலநோக்கியிருநிலமலர்க்கையேந்திப்
பொன்னெடுங்காசையீட்டிக்கொடுப்பதேபோன்றதன்றே. (௩௧)

---

* உலவைக்கொம்பு-பட்டமரக்கிளை.

† கோபம்-இந்திரகோபம், பட்டுப்பூச்சியென்ப.

கிளைத்துணைமழலைவண்டுகின்னரங்காத்தமின்னும்
துளிக்குரன்மேகம்வள்வார்த்தூரியந்துவைப்பபோன்ற
வளைக்கையார்போன்றமஞ்ஞைதோன்றிகளரங்கின்மாடே
விளக்கினமொத்தகாண்போர்விழியொத்தவிளையின்மென்பூ (௩௨)

பேடையு * ஞிமிறும்பாயப்பெயாவுழிப்பிறக்குமோசை
ஊடுறத்தாக்குந்தோறுமொல்லொலிபிறப்பநல்லா
ஆடியற்பாணிக்கொக்குமாரியவமிழ்தப்பாடற்
கோடியதாளங்கொட்டனமலர்ந்தகூதாளமொக்க. (௩௩)

வழைத்துறுகானயாறுமாநிலக்கிழத்திமக்கட்
குழைத்துறுமலைமாக்கொங்கைசுரந்தபாலொழுக்கையொத்த
விழைவுறுவேட்கைநாளுமவேண்டினர்க்குதவவேண்டிக்
குழைதொறுங்கனகந்தூங்குங்கற்பகங்காத்தகொன்றை. (௩௪)

பூவியலபுறவமெங்கும்பொறிவரிவண்டுபோர்ப்பத்
தீவியகளியவாகிச்செருக்கியகாமச்செவ்வி
ஓவியமரன்கடோறுமுறைத்தறவுரிஞ்சியொண்கேழ்
நாவியசெவ்விநாறக்கலையொடுமபுலந்தநவ்வி (௩௫)

வேறு

தேரினன்னெடுந்திசைசெலச்செருக்கழிந்தொடுங்கும்
கூரயிற்றருங்கணென்னக்குவிந்தனகுவளை
மாரனன்னவாவரவுகண்டுவக்கின்றமகளிர்
† மூரனமெனக்குறு ‡ முறுவலொத்தருமபினமுல்லை. (௩௬)

களிக்குமஞ்ஞையைக்கண்ணுளரினமெனக்கண்ணுற்
றளிக்குமன்னரிறபொன்மழைவழங்கினவருவி
வெளிக்கண்வந்தகாவிருந்தெனவிருந்துகண்டுள்ளம
களிக்குமங்கையர்முகமெனப்பொலிந்தனகமலம் (௩௭)

சரதநாண்மலரியாவையுங்குடைந்தனசடவிச
கரதநூநெறிவிடரெனத்தேனகொண்டுதொகுப்ப
பரதநூனமுறைநாடகம்பயனுறப்பகுப்பான
இரதநிட்டுறுங்கவிஞரைப்பொருவினதேனீ. (௩௮)

நோக்கினானைமைநோக்கழிகண்டநுணமருங்குற்
றூக்கணங்கருஞ்சிறைக்குத்தாக்கருந்துன்பம
ஆக்கினைமதுருவினென்றறம்பெறலுவகை
வாக்கினுரையாமெனக்களித்தனமானமர். (௩௯)

---

* ஞிமிறு-ஆண்வண்டு
† மூரல்-நகையிணையுடைய.
‡ முறுவல்-பற்கள்.

நீடுநெஞ்சுறுநேயத்தானெடிதுறப்பிரிந்து
வாடுகின்றனமருளுறுகாதலின்மயங்கிக்
கூடுநன்னதித்தடந்தொறுங்குடைந்தனபடிவுற்
றோடுகின்றனகொழுநரைப்பொருவினவன்னம். (௬0)

காரெனும்பெயர்க்கரியவனமார்பினிற்கதிர்முத்
தாரமென்னவும்பொலிந்தனவளக்கருமளக்கர்
நீர்முகந்தமாமேகத்தினருகுறநிரைத்துக
கூரும்வெண்ணிறத்திறத்தனபறப்பன * குரண்டம். (௬௧)

மருவிநீங்கல்செல்லாநெடுமாலையவானிற
பருவமேகத்தினருகுறக்குருகினம்பறப்ப
திருவிளையகனிவனெனத்தேமறைதெரிக்கும
ஒருவனமார்பினினுத்தரியத்தையுமொத்த. (௬௨)

உறவெதுப்புறுங்கொடுந்தொழில்வேனிலானொழிய
திறநினைப்பருங்காரெனுஞ்செவ்வியோன்சேர
நிறமனத்துறுகுளிர்ப்பினினெடுநிலமடந்தை
புறமயிர்த்தலம்பொடித்தனபோன்றனபசும்புல். (௬௩)

தேனவாமலர்த்திசைமுகன்முதலினர்தெளிந்தோர்
ஞானநாயகனவையுறநோக்கினர்நலக்க
கானம்யாவையும்பரப்பியகண்ணெனச்சனகன்
மானைநாடினனழைப்பனபோன்றன † மஞ்ஞை. (௬௪)

செஞ்செவேலவாசெறிசிலைக்குரிசிலரிருண்ட
குஞ்சிசேயொளிகதுவுறப்புதுநிறங்கொடுக்கும்
பஞ்சிபோர்த்தமெல்லடியெனப்பொலிந்தனபதுமம
வஞ்சிபோலியாமருங்கெனநுடங்கினவல்லி (௬௫)

நீயிரன்னவர்குதலையராதலினேடிப்
போயதையலைத்தருதிரென்றிராகவன்புகலத்
தேயமெங்கணுந்திரிந்தனபோந்திடைதேடிக்
‡ கூயவாய்க்குரல்குறைந்தபோற்குறைந்தனகுயில்கள். (௬௬)

பொழிந்தமாநிலம்புற்றரக்குமட்டியபுனிற்று
எழுந்தவாம்பிகளிடறினசெறிதயிரேய்த்த
மொழிந்ததேனுடைமுகிழ்முலையாய்சசியாமுழவிற்
பிழிந்தபால்வழிநுரையினைப்பொருவுவ § பிடவம். (௬௭)

---

* குரண்டம்-வெண்கொக்கு.
† மஞ்ஞை-மயில்.
‡ கூய-அழைத்த.
§ பிடவம்-ஒருமலர்.

வேஙகைநாறினகொடிசசியாவடிககுழல்விரைவண
டேஙகாகமுநாறினநுளைசசியரைமபால்
ஆஙகுநாண்முலலைநாறினவாயசசியரோதி
ஞாஙகருறபலமுழததியா * பிததிகைநாற. (௪௮)

தேரைககொண்டபோல்குலாடிருமுகஙகாஞனை
ஆரைக்கணடுயிராற்றுவானல்லுணாவழிநதான்
மாரற்கெண்ணில்பல்லாயிரமலர்ககணைவகுதத
காரைக்கண்டனன்வெநதுயாககொருகரைகாஞனை. (௪௯)

அளவில்காரெனுமபெரும்பருவமவநதணைந்தால்
தளாவரெனபதுதவம்புரிவோருககுந்தகுமால்
கிளவிதேனினுமமிழதினுஙகிளைததவெள்வளைதோள்
வளவியுண்டவன்வருநதுமெனறுலதுவருததோ (௫0)

காரவளஙகணட ராமன காதலியை நினைநது வருநதுதல்

காவியுஙகருஙகுவளையுநெயதலுஙகாயாம
பூவையுமபொருவானவனபுலமபினனறளாவான
ஆவியுஞ்சிறிதுணடுகொலாமெனவயிாததான
தூவியனனமன்ஞடிறததிவையிவைசொலலும (௫௧)

வேறு.

வாரோமுலையாளைமறைக்குநாவாழ
ஊரேயறியேனுயிரோடுழலவேன்
† நீரேயுடையாயருணினணிலையோ
காரேயெனதாவிகலக்குதியோ. (௫௨)

வெப்பாநெடுமின்னினெயிற்றைவெகுண்
டெப்பாலும்விசும்பினிருணடெழுவாய
அப்பாதகவஞசவரககரையே
ஒப்பாயுயிர்கொண்டல ‡ தோவலையோ. (௫௩)

அயிலேலவிழியாாவிளையாரமுதின்
குயிலேமொழியார்ககொணராயகொடியாய
துயிலேனொருவேனுயிர்சோர்வுணாவாய்
மயிலேயெனைநீவலியாடுதியோ. (௫௪)

மழைவாடையொடாடிவலிநதுயிர்மேல
நுழைவாயமலாவாய § நொடியாயகொடியே
இழைவாணுதலாளிடைபோலிடையே
குழைவாயெனதாவிகுழைககுதியோ. (௫௫)

---

* பிததிகை-கூநதல். † நீர-சலமும், நெகிழநத குணமும.
‡ ஓவலையோ-ஒழியாயோ. § நொடியாய்-பேசுவாயாக.

விழையேன்விழைவானவைமேன்மையினின்
றிழையேனுணாவேனவையினமையிஞல
பிழையேனுயிரோடிபிரிநதனரால
உழையேயவரெவவுழையாருரையாய். (ருசா)

பயிலபாடகமெலலடிபஞசனையாா
செயிரேதுமிலாரொடுதீருதியோ
அயிராதுடனேயகலவாயலையோ
உயிரேகெடுவாயுறவோராகிலையோ. (ருஎ)

ஒன்றைப்பகராயகுழலுக்குடையாய்
வன்றைப்புறுநீள்வயிரததினையோ
கொன்றைகதொடியாய்கொணாகிற்றிலையோ
எனறைக்குறவாகவிருநதனையோ (ருஅ)

வேறு

குராவருமபனையகூாவாளெயிறறுவெஙகுருளைநாகம்
விராவுவெஙகடுவிற்கொலலுமெல * விணாமுலலைவெயதின்
உராவருநதுயரமூட்டியோயவறமலைவதொனரோ
இராவணகோபஙிற்கவிநதிரகோபமென்றே (ருகூ)

ஓடைவாணுதலிஞளையொளிக்கலாமுபாயமுன்னி
நாடிமாரீசஞரோராடகநவவியாஞா
வாடையாயக்கூற்றிஞருமுருவினைமாற்றிவந்தார்
கேடுசூழவார்கருவேணடுமுருக்கொளககிடைததவன்றே. (சா0)

அருவினையரக்கரென்னவநதரமதனின்யாரும்
வெருவரமுழஙகுகினறமேகமேமினனுகின்றாய்
தருவலென்றிரஙகிஞயோதாமரைமறநததையல்
உருவினைககாட்டிககாட்டியொளிககினறயொளிக்கின்றயால். (சாக)

உணணிறைநதுயிாக்கும்வெமமையுயிாசுடவுடலையுள்ளம்
புண்ணுறவாளிஅாததலபழுதினிப்போதிமாரா
எணணுறுகல்வியுள்ளததிலையவனினனேயுனனைக
கணணுறுமாயிற்பின்னையாரவனசீற்றஙகாப்பாா (சாஉ)

வில்லுமவெஙகணையுமவீாவெஞசமததஞசிஞாமேல
புலலுநவலலவாறறலபோறறலாகுறிததலபோலாம்
அல்லுநனபகலுநீஙகாயணஙகநீயருளிற்றீர்நதாய
செலலுமென்றெளிவநதேதமைசெயலுமுநதீாமைததமோ (சாங)

* இணா-கொதது

என்னவித்தகையபன்னியீடழிந்திரங்குகின்ற
தன்னையொப்பானைநோக்கித * தகையழிந்தயாந்தம்பி
நின்னையெத்தகையையாகநினைந்தனைநெடியோயெனாச
சென்னியிற்சுமந்தகையனேற்றுவான்செப்பலுற்றான். (௬௪)

வேறு.

காலநீளிதுகாருமாரியும்வந்ததென்றகவற்சியோ
நீலமேனியரக்கர்வீரநினைந்தழுங்கியநேர்மையோ
வாலிசேனைமடந்தைவைகிடநாடவாரலிலாமையோ
சாலுநல்லுணர்கேள்விவீரதளர்ந்ததென்னைதவத்தினோய். (௬௫)

மறைதுளங்கினுமதிதுளங்கினுமவானுமாழ்கடல்வையமும்
நிறைதுளங்கினுநிலைதுளங்குறுநிலைமைநின்வயினிற்குமோ
பிறைதுளங்குவவனையபேரெயிறுடைய † பேதையர்பெருமைநின்
இறைதுளங்குறுபுருவமெனசிலையிடைதுளங்குறவிசையுமோ. (௬௬)

அனுமனென்பவனளவறிந்தனமறிஞவங்கதனாதியோர்
எனையரென்பதொரிறுதிகண்டிலமெழுபதெனவெள்ளமியல்பினார்
வினையின்வெந்துயர்விரவுதிங்களுமவிரைவுசென்றனவெளிதினின
தனுவெனுந்திருநுதலிவந்தனள் ‡ சரதமவன்றுயர்தவிர்தியே. (௬௭)

மறையறிந்தவர்வரவுகண்டுமைவலியும்வஞ்சகர்வழியொடும்
குறையவென்றிடார்களைவெனென்றனைகுறைமுடிந்ததுவிதியினால
இறைவவங்கவரிறுதிகண்டினிதிசைபுனைந்திமையவர்கடாம்
உறையுமும்பருமுதவிநின்றருளுணர்வழிந்திடலுறுதியோ. (௬௮)

காதுகொற்றநினைக்கலாதுபிறர்க்கெவ்வாறுகலக்குமோ
வேதனைக்கிடமாதல்வீரதையன்றுபேதைமையாமரோ
போதுபிற்படலுண்டிதோபொருளன்றியின்றுபுணர்த்தியேல்
யாதுனக்கியலாததெந்தைவருந்தலென்னவியம்பினான். (௬௯)

சொற்றதம்பியுரைக்குணர்ந்துயிர்சோர்வொடுங்கியதொல்லையோன்
இற்றவின்னலியக்கமெய்திட § வைகல்பற்பலவேகமேல்
உற்றுநின்றவினைகொடும்பிணியொன்றின்மேலுடனென்றுராய்
மற்றும்வெம்பிணிபற்றினாலெனவந்தெழுந்ததுமாரியே. (௭௦)

வேறு.

நிறைந்தனநெடுங்குளநெருங்கினதரங்கம்
குறைந்தனகருங்குயில்குளிர்ந்தவுயர்குன்ற

---

* தகையழிந்து-நிலைமைகெட்டு.
† பேதையர்-அறிவிலிகளான அசுரர்.
‡ சரதம்-உண்மை. § வைகல்-நாள்.

மறைநதனதடந்திசைவருந்தினர்பிரிந்தார
உறைந்தன * வகன்றிலுட † னன்றிலுயிரொன்றி. (எக)

பாசிழையராமையயாபழிப்பிலகலலகுற்
றாசுதொடருசனணிவெம்மைதொடர்வுறறே
வீசியதுவாடையெரிவெநதவிரிபுண்வீழ
ஆசிலயில்வாளியெனவாசைபுரிவார்மேல். (எஉ)

வேலைநிறைவுறறனவெயிர்கதிர்வெதுப்பும்
சீலமழிவுற்றபுனலுற்றுருவுசெப்பின
காலமறிவுற்றுணர்தல் ‡ கன்னலளவல்லால்
மாலைபகலுற்றதெனவோர்வரிதுமாதோ. (எங)

நெற்கிழியநெற்பொதிசிரமபினசிரம்பாச
சொற்கிழியநற்கிளிகடோகையவாதூய்மென்
பற்கிழிமணிப்படாதிரைப்பரதாமுன்றில்
பொற்கிழிவிரிததனசினைப்பொதுளுபுன்னை. (எச)

நிறஙகருகுகஙகுலபகனினறநிலைநீவா
அறஙகருதுசிநதைமுனியாதணரிறலிப்
பிறஙகருநெடுநதுளிபடப்பெயாவிலகுனறின்
உறஙகலில்விலஙகலிலநின்றவுயாவேழம். (எரு)

சநதினடையிற்படலைவேதிகைதடநதோ
ரநதியிடகிற்புகைநுழைந்தகுளிரனனம்
மநதிதுயிலுறறமுழைவன்கடுவ § னஙகத
திநதியமவிததகனியோகியினிருநத. (எசு)

ஆசில்சுனைவாலருவியாயிழையரைமபால்
வாசமணநாறலிலவானமணிவன்கால்
ஊசல்வறிதானவிதணைமணிகள்விண்மேல்
வீசலிலவானினெடுமாரிதுளிவீச. (எஎ)

கருநதகையதண்சினையகைதைமடலகாதல்
தருநதகையபோதுகிளையிற்புடைதயஙகப்
பெருநதகையபொறசிறையொடுக்கியுடலபோா
திருநதகுருகின்பெடைபிரிநதவாகளென்ன. (எஅ)

* அகன்றில-ஒருசாதிப்பறவை.
† அன்றில-ஒருசாதிப்புள்.
‡ கன்னல-நாழிகைவட்டில்.
§ அஙகததிநதியமவிததக-உடலிலுள்ள பஞசேந்திரியஙகளை ஒடுக்கிய.

* பதங்கமுழ † வொத்தவிசைபண்டுமிறுபன்ன
விதங்களினடித்திடுவிகற்பவழிமேவும
மதங்கியரையொத்தமயிலவைகுமரமூலத
தொதுங்கினவுழைக்குலமழைக்குலமுழக்க. (௭௯)

விளக்கொளியகிற்புகைவிழுங்கமளிமென்கொம
பிளைக்குமிடைமங்கையருமைந்தர்களுமேற்ற
தளத்தகுமலர்த்தவிசிகந்துநகுசந்தின
றுளைத்துயிலுவந்துதுயில்வுற்றகுளிர்தும்பி (௮௦)

தாமரைமலர்த்தவிசிகந்துதகையன்னம்
மாமரனிரைத்தொகுபொதும்பருழைவைகத்
தேமரனுகேகிதணிடைச்செறிகுரம்பைத்
தூமருவெயிற்றியரொடன்பர்துயில்வுற்றார். (௮௧)

வள்ளிபுடைசுற்றியுயர்சிற்றிலைமரந்தோ
றெள்ளருமறிக்குருளொடண்டர்களிருந்தார்
கள்ளரிஞெரித்துழனெடுங்கழுதொடுங்கி
முள்ளெயிறுதின்றுபசிமூழ்கிடவிருந்த. (௮௨)

சரம்பயினெடுந்துளிநிமிர்ந்தபுயல்சார
உரம்பெயர்வில்வனகரிகரந்துறவொடுங்கா
வரம்பகனெடும்பிரசமவைகலபலவைகும்
முரம்பினினிரம்பலமுழைஞ்சிடைநுழைந்த. (௮௩)

இத்தகையமாரியிடைதுன்னியிருளெய்த
மைத்தகுமணிக்குறுநகைச்சனகன்மான்மேல்
உய்த்தவுணர்வத்தினனெருப்பிடையுயிர்ப்பான்
வித்தகனிலக்குவனைமுன்னினன்விளம்பும். (௮௪)

வேறு.

மழைக்கருமின்னெயிற்றரக்கனவஞ்சனை
இழைப்பருங்கொங்கையுமெதிராயுறநினைவின
உழைத்தனனலைந்துயிருலக்குமொன்றினும
பிழைப்பரிதெனக்கிதிதென்னபெற்றியோ. (௮௫)

தூநிறச்சுடுசரந்தூணிதூங்கிட
வானுறப்பிறங்கியவயிரத்தோளொடும்
யானுறக்கடவதேயிதுவுமிந்நிலை
வேனிறத்துற்றதொத்துழியும்வீகிலேன (௮௬)

---

* பதங்கம்-விட்டுவிட்டொலிக்கு மொருவகைப்பறவை, சிள்வீடு மாம். † ஒத்த-அடிக்க.

தெரிகணைமலரொடுந்திறநதநெஞ்சொடும்
அரியவன்றுயரொடுமயானுமவைகுவேன்
எரியுமினமிணிமணிவிளககினினறுணைக
குரீஇயினம்பெடையொடுந்துயில்கூட்டினுள். (அஎ)

வானகமின்னினுமழைமுழஙகினும்
யானகமெலிகுவேனெயிற்றராவெனக்
கானகமபுகுநதியானமுடிததகாரியம்
மேனகுஙகிழநகுமினியெனவேண்டுமால. (அஅ)

மறநதிருந்துய்கலேனமாரியீதெனின
இறந்துவிண்சேர்வது * சரதமிப்பழி
பிறந்துபினறீர்வலோபினனரன்னது
துறநதுசெனறுறுவலோதுயரின்வைகுவேன். (அகூ)

ஈண்டுநின்றரககாதமிருககையாமினிக்
காண்டலிற்பற்பலகாலஙகாணடுமால்
வேண்டுவதனறிதுவீரநோய்தெற
மாண்டனெனெனறதுமாட்சிப்பாலதால் (கூ0)

† செப்புருக்கனையவிம்மாரிசசீகரம
வெப்புறப்புரஞ்சுடவெநதுவீவதோ
அப்புருக்கொண்டவாணெடுஙகணுயிழை
துப்புருககுமுதவாயமுதநதுய்ததயான் (கூக)

நெய்யடைதீயெதிரநிறுவிநிற்கிவள்
கையடையென்றவசசனகன்கட்டுரை
பொயயடையாக்கிய ‡ பொறியிலேனுடு
மெய்யடையாதினிவிளிதனன்றரோ. (கூஉ)

தேற்றுவாய்ீயுளையாகத்தேறிநின்
ரூற்றுவேணுனுளஞைகவாய்வளை
தோற்றுவாளலலளிததுன்பமாரினி
மாற்றுவாரதுயாகொருவரம்புண்டாகுமோ. (கூங)

விட்டபோரவாளிகள்விரிஞ்சன்விண்ணையும்
சுட்டபோதிமையவாமுதலதொல்லையோர்
பட்டபோதுலகமுமுயிருமபற்றறக
கட்டபோதல்லதுமயிலைககாண்டுமோ. (கூச)

---

* சரதம்-உண்மை.
